௵ வைகாசி




வருட சந்தா ரூ. 2-0-0.

## பொருளடக்கம்.


| | | | | |
|---|---|---|---|---|
| திருப்புகழ் | ஆசை நாலு | உ௬ | கந்தர் திருவிளையாடல் | ௩௬ |
| அலங்காரம் | சிந்திக்கிலேன் | ௩௨ | கற்பு | ௪௨ |


காங்கேய நல்லூர்

# ஸ்ரீ சுந்தர விநாயகர் திருவாலய கும்பாபிஷேகம்.

(4-6-44)

நமது திருப்புகழமிர்த ஆசிரியரவர்களின் தந்தையார், புராணேதிகாச பாரங்கதர் சிவத்திரு **மல்லையதாஸ் பாகவதர்** அவர்களால் சுமார் ஐயாயிரம் ரூபாய் செலவில் சிற்பசிகாமணி துறையூர் திரு. நா. சௌந்தரபாண்டியசிவனார் அவர்களைக் கொண்டு மிகவும் உயர்ந்த முறையில் காங்கேயநல்லூரில் ஸ்ரீ சுந்தரவிநாயகர் திருவாலயம் புதுப்பிக்கப்பட்டு சென்ற ஆண்டு திருப்பணி முடிவுற்றது. அத் திருக்கோயிலில் நிகழும் தாரணவாண்டு வைகாசித்திங்கள் 22-ம் நாள் (4-6-44) ஞாயிற்றுக்கிழமை **ஸ்ரீ சுந்தரவிநாயகர் பிரதிஷ்டையும், கும்பாபிஷேகமும்** நடைபெறும். அன்று ஆசிரியர் திருமுருக **கிருபானந்த வாரி**யவர்களும், இன்னும் பல ஆன்றோர்களும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். விரிவான நிகழ்ச்சி முறை பின்னர் வெளிவரும்.

மானேஜர், திருப்புகழமிர்தம்.

---


**கந்தரநுபூதி (உரையுடன்)** நமது திருப்புகழமிர்தத்தில் வெளிவந்தது; விலை ரூ 1-0-0 தபாற் செலவு ரூ 0-5-0

**கிடைக்குமிடம் :—**

**திருப்புகழமிர்தம் ஆபீஸ், காங்கேயநல்லூர்.**

[illegible]

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் [illegible]
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் ௯ Vol 9. | தாரண ஹூ வைகாசி மீ 1௳, மே 1944 | இதழ் ௨ No 2.

## திருப்புகழ்

### பழமுதிர்சோலை.

ஆசை நாலுசது ரக்கமல முற்றினொளி
வீசி யோடியிரு பக்கமொடு றச்செல்வன்
ஆவல் கூரமண்மு தற்சலச பொற்சபையு மிந்துவாகை
ஆர மூணுபதி யிற்கொளநி றுத்திவெளி
யாரு சோதி நுறு பத்தினுட னெட்டுஇத
ழாகி யேழுமள விட்டருணை யிற்பதியின் விந்துநாத
ஓசை சாலுமொரு சத்தமதி கப்படிக
மோடு கூடியொரு மித்தமுத சித்தியொடு
மோது வேதசர சத்தியடி யுற்றதிரு நந்தியூடே
ஊமை யேனையொளிர் வித்துனது முத்திபெற
மூல வாசல்வெளி விட்டுனது ரத்திலொளிர்
யோக பேதவகை யெட்டுமிதி லொட்டும்வகை
யின்றுதாராய்

வாசி வாணிகமெ னக்குதிரை விற்றுமகிழ்
வாத வூரனடி கைக்கொளுநக் கடவுள்
மாழை ரூபன்முக மத்திகைவி தத்தருண செங்கையாளி

[redacted]யுறை சத்திகவு ரிக்குதலை
வாயின் மாதுதுகிர் பச்சைவடி விச்சிலையென்
மாசுசேரெழுபி றப்பையுமறுத்தவுமை தந்தவாழ்வே

காசி ராமேசுரம் ரத்நகிரி சர்ப்பகிரி
ஆரூர் வேலூர் தேவூர் கச்சிமது ரைப்பறியல்
காவை மூதூரரு ணக்கிரிதி ருத்தணியல் செந்தில்நாகை

காழி வேளூர்பழ நிக்கிரிகு றுக்கைதிரு
நாவ லூர்திருவெ ணெய்ப்பதியின் மிக்கதிகழ்
காதல் சோலைவளர் வெற்பிலுறை பூத்தர்புகழ்
தம்பிரானே.

## பதவுரை.

வாசி வாணிகன் என - குதிரை வியாபாரியாக வந்து, குதிரை விற்று - மதுரையில் பாண்டியனிடம் குதிரை விற்று, மகிழ் வாதஊரன் அடிமை கொளும் - அதனால் மனம் மகிழ்ந்த திருவாதஊரரை அடிமை கொண்டவரும், கிருபைக் கடவுள் - கருணைக் கடவுளும், மாழைரூபன் - பொன்னிற முடையவரும், முகம் மந்திகை வித்தக அருண செம் கையாளி - ஒலிக்கின்ற குதிரைச் சம்மட்டியால் குதிரையைச் செலுத்துகின்ற வகை பொருந்திய ஒளியும் அழகும் உடைய திருக்கரத்தை யுடையவரும் ஆகிய சிவபெருமானுடைய, வாகு பாதி உறை சத்தி - இடப்பாகத்தி லிருக்கும் ஆற்றலுடையவரும், கவுரி - பொன்னிற முடையவரும். குதலை வாயின மாது - மழலை மொழி பேசும் பெண்ணமுதமானவரும், துகிர் பச்சை வடிவி - பவளங்கலந்த பச்சை நிறத்தை யுடையவரும், சிலை - மங்கலம் பொருந்தியவரும், என் மாசு சேர் எழு பிறப்பையும் அறுத்த உமை - அடியேனுடைய குற்றமிக்க எழுவகையான பிறப்புக்களையும் அறுத்து ஆட்கொண்ட உமாதேவியாரும் ஆகிய அம்பிகை, தந்த பாலா - பெற்றருளிய திருமைந்தரே! காசி - காசியம்பதி, ராமேசுரம் - திருவிராமேச்சுரம், ரத்னகிரி - வாட்போக்கி என்னும் இரத்தினகிரி, சர்ப்பகிரி - திருச்செங்கோடு, ஆரூர் - திருவாரூர், வேலூர் - வேலூர், தேவூர் - தேவூர், கச்சி - காஞ்சீபுரம், மதுரை - மதுரையம்பதி, பறியல் - திருப்பறியலூர், காவை - திருவானைக்கா, மூதூர் - பழமலை என்னும் விருத்தாசலம் (திருப்புனவாயில் எனினும் அமையும்), அருணக்கிரி - திருவண்ணாமலை, திருத்தணியல் - திருத்தணிகை, செந்தில் - திருச்செந்தூர், நாகை - நாகப்பட்டினம், காழி - சீகாழி, வேளூர் - புள்ளிருக்கும் வேளூர் என்னும் வைத்தீச்சுரன் கோயில்,

பழநிக்கிரி - பழநிமலை, குறுக்கை - குறுக்கை, திருநாவலூர் - திருநாவலூர், திருவெணெய்ப்பதியில் - திருவெண்ணெய் நல்லூர் என்னுந் திருத்தலங்களிலும், மிக்க திகழ் காதல் சோலை வளர் வெற்பில் உறை - மிகவும் திகழ்கின்றதும் அன்பை விளைவிப்பதும் சோலை வளர்கின்றதுமாகிய பழமுதிர்சோலை என்னும் திருத்தலத்திலும் வாழ்கின்ற முத்தர் புகழ் - சீவன் முத்தர்களால் புகழப் பெறுகின்ற, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! இன் ஒளி வீசி ஓடி இருபக்கம் ஒடு உற செல்வளி - இனிய ஒளியைப் பரப்பி இடைபிங்கலை என்னும் இருநாடிகளின் வழியே ஓடிக்கழியும் வாயுவை, ஆசை நாலு சதுர கமலம் உற்று - நான்கு பக்கத்தையுடைய மூலாதாரத்திற் பொருந்தி, ஆவல்கூர - விருப்பமூற, மூலப்பதியில் - அக்கினியாதி மூன்று மண்டலங்களிலுமுள்ள மண்முதல் சலசம் - (அங்கிருந்து சுழுமுனை நாடி வழியாக) சுவாதிஷ்டானம் முதல் ஆக்ஞை யீறாகவுள்ள ஐவகைக் கமலங்களிலும், இந்து காளை ஆர - சந்திரகாந்தி நிறைந்த பொற்சபையும், கொளகீறுத்தி - பிரமரந்திரக் கமலத்திலும் பொருந்த நிறுத்தி, வெளி ஆக(ம்) சோதி நூறுபத்திலுடன் எட்டு இதழ் ஆகிய வழும் அளவிட்டு - அப்பால் ஆயிரத்தெட்டு இதழோடுங் கூடிய சோதி நிறைந்த வெளியாகிய துவாதசாந்த கமலம் என, ஏழு தலங்களையும் பொருந்தி அருணவில் பதியில் - சூரிய ஒளி பொருந்திய பிரமரந்திரத்தில், விந்துநாத ஓசைசாலும் ஒரு சத்தம் அதிகப்படு இடம் ஒடு கூடி - பிரமநாத ஓசையிருந்த ஒப்பற்ற சத்தம் அதிகப்படுகின்ற இடத்துடன் கூடி ஒருமித்து, அமுத சித்தியொடும் - மதிமண்டலத்தினின்றும் பெருகிப் பாயும் கலாமிர்தப் பேற்றுடன், வேதம் ஓது சரசத்தி அடி உற்ற திருநந்தி ஊடே - வேதம் சொல்லுகின்ற வாசி சத்திக்கு ஆதாரமாகவுள்ள ஸ்ரீ நந்தி ஒளியையும், ஊமையேனை ஒளிர்வித்து - ஊமையேனுக்குத் தெரிவிப்பித்து, உனது முத்தி பெற மூல வாசல் வெளிவிட்டு - தேவரீருடைய முத்தியை அடியேன் பெற்றுய்யுமாறு பிரமரந்திர வெளிவிட்டு, உனது உரத்தில் ஒளிர் - உமது திருவருள் வலிமையினால் விளங்குகின்ற, யோக பேத வகை எட்டும் இதில் ஒட்டும் வகை - அஷ்டாங்கயோகமும் இதனுடன் பொருந்தும் வகையை, இன்று தாராய் - இன்று தந்தருள வேண்டும்.

## பொழிப்புரை.

மதுரைப்பதியில் குதிரை வியாபாரியாக வந்து அரிமர்த்தன பாண்டியனிடம் குதிரை விற்று, அதனால் மகிழ்ச்சியுற்ற மாணிக்கவாசகரை அடிமைகொண்ட

கருணைக் கடவுளும், பொன்னார் மேனியரும், குதிரைச் சம்மட்டியினால் குதிரையைச் செலுத்துகின்ற வகையும் ஒளியும் உடைய சிவந்த திருக்கரத்தை யுடையவரும் ஆகிய சிவபெருமானுடைய இடப்பாகத்தில் வீற்றிருப்பவரும், அருட்சத்தியும், பொன்னிற முடையவரும், மழலைமொழி பேசும் மாதரசும், பவள நிறத்துடன் கூடிய பச்சை நிறமுடையவரும், மங்கல மானவரும், அடியேனுடைய ஏழு பிறப்பையும் அறுத்த உமாதேவியாருமாகிய பார்வதியம்மையார் பயந்த திருப்புதல்வரே! காசி, திருவிராமேச்சுரம், இரத்தினகிரி, திருச்செங்கோடு, திருவாரூர், வேலூர், தேவூர், காஞ்சி, மதுரை, திருப்பறியல், திருவானைக்கா, பழமலை, திருவண்ணாமலை, திருத்தணிகை, திருச்செந்தூர், நாகப்பட்டினம், சீகாழி, புள்ளிருக்கும் வேளூர், பழநி, குறுக்கை, திருநாவலூர், திருவெண்ணெய்நல்லூர் முதலிய திருத்தலங்களிலும், மிகவுந் திகழ்கின்றதும் சோலைகளுடன் கூடியதுமாகிய பழமுதிர் சோலையிலும் எழுந்தருளியுள்ள முத்தான்மாக்களால் புகழப்பெறுகின்ற பெருமிதமுடையவரே! இனிய ஒளியைப பரப்பி இடைகலை பிங்கலையென்னும் இரு நாடிகளின் வழியாக ஓடிக்கழியும் பிராணவாயுவை நான்கு பக்கத்தையுடைய மூலாதாரத்திற் பொருந்தி, அங்கிருந்து சுழுமுனைநாடி வழியாக, சுவாதிஷ்டானம் முதல் ஆக்கினை யீறாகவுள்ள ஐந்து கமலங்களிலும் ஓட்டி நிறுத்தி, அக்கினி சூரியன் சந்திரன் என்ற மூன்று மண்டலங்களிலுஞ் செலுத்தி, பிரமரந்திர கமலத்திலும் பொருந்த நிறுத்தி, அப்பால் ஆயிரத்தெட்டு இதழோடுங் கூடிய சோதி நிறைந்த வெளியாகிய துவாதசாந்த கமலம் வரை ஏழுதலங்களையும் பொருந்தச் செலுத்தி, சூரிய ஒளி வீசும் ஒளிமண்டலத்தில் பிரமநாதமானது ஒலிக்க அதனுடன் ஒருமித்து, மதிமண்டலத்தில் கலாமிர்தம் பெருகிப் பாய அவ்வமிர்தப் பேற்றுடன், வேதங்கூறுகின்ற சரசத்திக்கு ஆதாரமாகவுள்ள ஸ்ரீ நந்த ஒளியையும் [illegible]மையேனுக்குத் தெரிசிப்பித்து, தேவரீரது முத்தியைப் பெற பிரமரந்திர வெளி வாசல் திறந்துவிட்டு இங்ஙனஞ்

செய்வதால்; உமது திருவருள் வலிமையால் விளங்குகின்ற அஷ்டாங்க யோகங்களும் இதனுடன் பொருந்தும் வகையை அடியேனுக்கு இன்று தந்தருள வேண்டும்.

## விரிவுரை.

**ஆசைநாலு சதுர........ ...இந்து வாகை :—**

ஆசை-பக்கம்; நாலு சதுரக் கமலம்-மூலாதாரம். இடை பிங்கலை யென்ற இரு நாடிகளின் வழியே ஓடிச் சுழியும் பிராண வாயுவை அங்ஙனஞ் செல்லவிடாது முதுகுத்தண்டின் நடுவே தாமரை நூல்போல் நுணுகியுள்ள சுழுமுனை நாடி வழியே செலுத்துதல் வேண்டும். சிவயோகத்தின் குருத்தை மிகவும் தெள்ளிதின் உணர்த்த அருணகிரிநாத சுவாமிகளேயன்றி யார்தான் இதனை விளக்கவல்லார்?

"மூலங்கிள ரோருரு வாய்நடு
நாலங்குல மேனடு வேரிடை
மூள் பிங்கலை நாடியொ டாடிய முதல்வேர்கள்
மூணும்பிர காசம தாயொரு
சூலம்பெற வோடிய வாயுவை
மூலந்திகழ் தூண்வழி யேயள விடவோடி"
—திருப்புகழ்.

அங்ஙனம் சுழுமுனை வழியே செலுத்தும் பிராண வாயுவை முறைப்படி சுவாதிஷ்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை யென்ற ஐந்து ஆதாரங்களில் நிறுத்தி பிரமரந்திரத்திற் செலுத்தி அதற்குமேல் சகஸ்ராரக்கமலமாகிய துவாதசாந்தத்தில் செலுத்துதல் வேண்டும்.

**இந்துவாகை :—**

இந்து-சந்திரன். இந்துவாகை ஆர—சந்திகாந்தி நிரம்ப;

**மூணுபதி :—** சந்திரமண்டலம், சூரியமண்டலம், அக்கினி மண்டலம்.

**விந்துநாத ஓசைசாலும் ஒருசத்தம்..........அமுதசித்தி :—**

மூலாதாரத்தில் மூண்டெழுங் கனலை காலா லெழுப்பி

புந் கருத்தறிந்து முறைப்படி எழுப்பி மதிமண்டலத்தில் தாக்கச்செய்வதால் அமிர்ததாரை பொங்கி வழியும். வாயு அடங்கி உடம்பெங்கும் வியாபிப்பதால் தசவிதநாதங்கள் உண்டாகும்.

" அங்கிதனை மூட்டி அண்டமொடு தாவி விந்து ஒலி
கத்த மந்திரவதான வெண்புரவி மிசை யேறி"

' நாளுமதிவேக கால்கொண்டு தீமைபட
வாசியன லூடு போயொன்றி வானின்க
லைமதி மீதி லூருங் கலாபின்ப அமுதூறல்

நாடியதன் மீது போயொன்றி ஆனந்த
மேலை வெளியேறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே"

என்றுவருநர் அநுபவத் தெளிவுகளாகத் திகழும் அருணைத் திருப்புகழடிகளாற் றெளிக.

ஊமையோனை :—

சிவயோகநிலையில் சித்திர தீபம் போல் அசைவற நிற்பதனால பேசா அநுபூதி பிறக்கும். சொல்லறச் சும்மா யிருத்தல். அந்நிலைபெற விரும்புவதனால் ஊமையோன் என்றனர்.

உரையவிழ வுணர்வவிழ உளமவிழ உயிரவிழ
உளபடியை யுணருமவ ரநுபூதியானதுவும் —வகுப்பு

மூலவாசல் வெளிவிட்டு :— பிரமந்திர வழிதிறத்தல்.

" தங்கிய தவத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெளிக்குவழி — அருள்வாயே" —திருப்புகழ்.

வாசி வாணிகன் ............சேவகையாளி :—

மாணிக்கவாசகர் குதிரை வாங்கக் கொண்டுபோன செல்வத்தைத் திருப்பணியில் செலவழித்துக் குருந்தடியிற் குருவருள் பெற்று சிவஞான போதச் செல்வராயமர்ந் திருந்தனர். சிவபெருமான் அவர்பொருட்டு நரிகளைப் பரிகளாக்கி வேதப்புரவிமீது குதிரைச் சேவகராக மதுரையிற் சென்று பாண்டியனிடம் குதிரை விற்று மணிவாசகரை யாட்கொண்டருளினர்.

"பரியென்ப நரிகள்தமை நடனங்கொ டொருவழுதி
பரிதுஞ்ச வருமதுரை நடராஜன்"

—திருப்புகழ்.

ஏனைய அன்பர்கள் பற்பல செயற்கருஞ் செயல்களாற் றிருத்தொண்டுபுரிந்து பெருமானுக்கு அடிமைப்பட்டனர். சிவப்ரகாச சுவாமிகள் கூறுமாறு காண்க.

"கடல்நிற வண்ணன் கண்ணொன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிசு கொடுத்த சுருதி நாயகற்கு
முடிவிளக் கெரித்தும் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்தும்
அருமகன் நறும்பூங் கருமயி ருதவியும்
தென்மூனை வாரி இன்னமு தருத்தியும்
கோவணை நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படு மணிமீன் அரற்கென விடுத்தும்
பூட்டி யறிவான் ஊட்டி யரிந்தும்
தலையுடை யொலிக்கும் சிலையிடை மோதியும்
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்தும்
தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றும்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநாள் ஒருசிலர் தொண்டரா யினர்."

ஆனால் ஆராலுங்காணாத அரனார்,

"மதுரை மா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நிற்றெழின் மேனியின் மாற்றடிபட்டும்."

மாணிக்கவாசகரைத் தொண்டுகொண்டனர்.

ரத்னகிரி :— இது குளித்தலை ரயில்வேஸ்டேஷனுக்கு தெற்கே 6½ மைலில் உள்ளது.

சர்ப்பகிரி :— திருச்செங்கோடு. நாகாசலம் என்றும் சொல்லப்படும். சங்கரிதுர்க்கம் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 5 மைலில் உள்ளது. மிகவும் சிறந்த இருக்கலம்.

ஸ்ரீ

ஓம் குஹாய நம:

# கந்தரலங்காரம்

(௧௫ வது பக்கத்தொடர்ச்சி.)

வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்த வாபஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.

### பதவுரை.

*பஞ்சபூதமும் அற்று - மண் நீர் தீ காற்று வெளி ஆகிய ஐந்து பூதங்களும் நீங்கி, உரை அற்று - சொல்லற்று, உணர்வு அற்று - சுட்டியறிகின்ற அறிவும் நீங்கி, உடல் அற்று - உடம்புடன் தொடக்குணமுறையும் அலக்கணும் அறவேயொழிந்து, உயிர் அற்று - உயிரின் தன்மையும் நீங்கி, உபாயம் அற்று - சோபானங்களாகிய சாதனங்களும் நீங்கி, கரை அற்று - முடிவுமற்று, இருள் அற்று - மூலமலமாகிய ஆணவ இருளும் தேய்ந்து, எனது அற்று -*

---

தேவூர் :— இத் திருத்தலம் கீழ்வேளூர் ஸ்டேஷனுக்குத் தெற்கே 3 மைலில் உள்ளது. தேவர்கள் சிவபெருமானிடம் மந்த்ரோபதேசம் பெற்ற அருமைத் தலம்.

குறுக்கை :— அட்டவீரட்ட தலங்களுள் ஒன்று; மன்மதனை எரித்த இடம். இது திருஅன்னியூரிலிருந்து வடமேற்கே மட்சாலை வழியே 3 மைல் சென்று அங்கு நின்று ஐயாவையன் வாய்க்காலுக்கு மேற்புறம் ½ மைலிலுள்ளது

### கருத்துரை.

**காசிமுதல் ராமேச்சுரம் ஈறாக பல தலங்களிலும் பழமுதிர்சோலையிலும் எழுந்தருளிய எம்பெருமானே! பார்வதி பாலரே! சிவயோகம் எட்டும் எளிதில் எனக்குச் சித்திக்கும் வகை இன்றே அருள்புரிவீர்.**

எனது என்ற புறப்பற்றும் அகன்று, இருக்கும் அக்காட்சியது மனோலய ஆனந்தபரிபூரண சமாதி நிலையில் இருக்கும் அந்த அருட்காட்சியானது, வரை அற்று – கிரௌஞ்ச மலை பிளந் தொழியவும், அவுணர் சிரம் அற்று - சூராதியவுணர்களின் தலைகள் அற்று உருளவும், வாரிதி வற்ற செற்ற – கடல் வற்றவும் அழித்த, புரை அற்ற வேலவன - குற்றமில்லாத ஞானசக்தியை யுடைய முருகக் கடவுள், போதித்தவா - அடியேனுக்கு உபதே சித்தது என்ன வியப்பு?

## விரிவுரை.

வரையற்று :—

தாரகாசுரனுக்கு அநுகூலமாக இருந்து பலப்பல மாயங்களைப்புரிந்து, இமையவருக்கும் இருடியர்க்கும் இடுக்கண் இழைத்து வந்தவனும், கிரௌஞ்சம் என்ற பறவை யுருவுடன் மலைவடிவாக நின்றவனும், அகத்திய முனிவரால் சபிக்கப்பெற்றவனும் ஆகிய, கிரௌஞ்சன் இலக்கத்தொன்பான் வீரர்களையும் படைத்தலைவர்களையும் மயக்கி இடர் விளைத்தனன். அதனால் ஆறுமுகக்கடவுள் அம்மாயையில் வல்ல கிரௌஞ்ச வெற்பை வேலாயுதத் தால் பிளந்தழித்தனர்.

அவுணர் சிரமற்று :—

தாரகன் சிங்கமுகன் முதலிய அவுணர்களின் தலைகள் அற்று விழுமாறு வேற்படையை முருகவேள் விடுத்தருளினார்.

வாரிதிவற்றச்சேற்ற :

இறுதி நாளில் சூரபன்மன் கடலிற்போய் ஒளித் தனன்; அவனைத் தொடர்ந்து சென்ற வேலாயுதம் அக் கடலை வற்றச்செய்தது.

"வேலைவற்றி வறண்டு சுறீல் சுறீல் என"

—திருப்புகழ்.

| | | |
|---|---|---|
| கிரௌஞ்சமலை | — | வினைத்தொகுதி |
| தாரகன் | — | மாயாமலம் |
| சிங்கமுகன் | — | கன்மமலம் |

| | | |
|---|---|---|
| சூரபன்மன் | — | ஆணவமலம் |
| கடல் | — | பிறவித்துன்பம் |
| வேல் | — | பதிஞானம் |

**வேலவன் போதித்தவா :—**

ஞானசக்திதரக்கடவுள் உபதேசித்ததை வியந்து பாராட்டுகின்றனர்; சுவாமிகள் இங்ஙனமே பலமுறை பாராட்டி மகிழ்கின்றனர்.

*ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத் துச்சியின்மேல்*
*அளியில் விளைந்ததொ ராநந்தத் தேனை யநாதியிலே*
*வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியை*
*தெளிய விளம்பியவா முகமாறுடைத் தேசிகனே.*
*"ஒருபூதரு மறியாத் தனிவீட்டில் உரையுணர்வற்*
*றிரு பூத வீட்டிலிராமலென் றான்"*
*"சொல்லுகைக் கில்லையென் றெல்லாமிழந்து சும்மா*
*எல்லையுட் செல்ல எனைவிட்டவா"* [விருக்கும்

**பஞ்சபூதமுமற்று :—**

அவ்வாறு குமாரகுருபரன் உபதேசித்த உபதேசமானது ஐம்பெரும் பூதமும் அற்ற இடத்திலே காண்டற்குரியது.

*தேனென்று பாகென் றுவமிக் கொணுமொழித் தெய்வவள்ளிக்*
*கோனன் றெனக்குப தேசித்த தொன றுண்டு கூறவற்றே*
*வானன்று காலன்று தீயன்று நீரன்று மணணுமன்று*
*தானன்று நானன் றசரீரியன்று சரீரியன்றே.*

—அலங்காரம்.

*"பூதமுங்கரணம் பொறிகளைம்புலனும் பொருந்திய*
*குணங்களோர் மூன்றும் நாதமுங்கடந்த வெளியிலே"*

—பட்டினத்தடிகள்.

**உரையற்று :—**

சொல்லற்று நிற்கும் சுகபூரணநிலை; அறுமுகப் பெருமான் அருணகிரிநாதருக்கு அருணையில் குருமூர்த்தியாக வந்து,

"சும்மா இரு ; சொல்லற"

என்று உபதேசித்தருளினார்.

"உரையவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ
வுளபடியை யுணருமவ ரநுபூதியானதுவும்" —வகுப்பு.
"உரையுணர்வு அற்று இரு" —அலங்காரம்.
"பேசா அநுபூதி பிறந்ததுவே" —அநுபூதி.

உணர்வற்று :—

சுட்டியறிகின்ற அறிவு. இந்த உணர்ச்சி நீங்கினு லன்றி தடையற்ற ஞானம் உண்டாகாது.

உடலற்று உயிரற்று :

உடம்போடிருக்கும்போதே உடம்பின் தொடக்கு நீங்கிவிடவேண்டும். வாள் உறையில் தொடக்கின்றி இருப்பதுபோல். அவ்வாறு தேகபுத்தி நீங்கப்பெற்றவரை உடம்புக்கு வரும் இன்பதுன்பம் பற்றாது. உடலூறாக முடியும்.

சொன்னக் ரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைத்த வைவேல்
மன்ன கடம்பின மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம் பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே
—அலங்காரம்.

உபாயமுமற்று :—

இலட்சியத்தை யடையச்செய்யும் சாதனங்களும் நீங்கவேண்டும். சாத்தியம் வந்தபின் சாதனந் தானே நீங்கும் பிணஞ்சுட்டவுடன் சுடுகோல் அத்துடனே வெந்து நீறுகுவதுபோல்.

கரையற்று :—

முடிவற்ற பூரணநிலை.
போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்பு முள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தரு மெனைத்தன் வசத்தே
ஆக்கு மறுமுகவா சொல்லொணு திந்த ஆநந்தமே.

இருளற்று :—

ஆணவமலமாகிய இருள். இது இருளினும் வலிமை யுடையது. இருள் தன்னைக்காட்டி ஏனைய பொருள்

உ

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

(கசு-வது முன்பக்கத் தொடர்ச்சி)

கனகசுந்தரி யிறந்து மறுபிறப்பில், உலகம் யாவையும் பொதுநீக்கி யரசுபுரிந்த மதுரை மன்னன் உக்கிரப் பெருவழுதிக்கு மகளாகப் பிறந்தனள். அக்காலத்து மிக்க அழகின் கொழுந்துபோல் விளங்கினாள் ஆதலின் அங்கசுந்தரி என்று பேரிடப்பட்டு தாய்களிக்கத் தமர்களிக்க வளர்ந்தனள். கலைபலவுணர்ந்து காண்பார் கண்ணுங் கருத்தும்

---

களைக் காட்டாமல் மறைக்கும். ஆணவஇருள் தன்னையுங் காட்டாமல், ஏனைய பொருள்களையுங் காட்டாமல் மறைக்கும் விறலுடையது.

எனதற்று :—

எனது-புறப்பற்று; நான்-அகப்பற்று. நான் என்ற அகப்பற்று தொலையவேண்டுமானால் முதலில் எனது என்ற புறப்பற்று தொலையவேண்டும். ஒரு சப்பாத்திக்கள்ளியைச் சுற்றி தாழங்காடு இருக்கின்றது. சப்பாத்திக்கள்ளியை யழிக்கவேண்டுமாயின் தாழங்காட்டையழிக்க வேண்டும். சப்பாத்திக்கள்ளிபோல் நான்; தாழங்காட்டைபோல் எனது. எனது என்ற புறப்பற்று தொலைந்த பின்னரேயே நான் என்ற அகப்பற்று தொலையவேண்டும்.

எனதியானும் வேறாகி எவரும்யாதும் யானாகும்
இதயபாவனாதீதம் அருள்வாயே.
—திருப்புகழ்.

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகு புகும் —வள்ளுவர்

## கருத்துரை.

ஞானவேலைத்தாங்கிய முருகக்கடவுள் அடியேனுக்கு உபதேசித்த காட்சி எல்லாமற என்னையிழந்த நலமாகும்.

ஒருங்கே சுவருங் கவினுடன் திகழ்ந்... அதனால் முனிவரிட்ட சாபம் தொடர்ந்து குதிரை முகத்தை யடைந்தனள். அதுகண்ட அரசனும் அரசியும் சுற்றமும் அல்லற் கடலில் ஆழ்ந்து வருந்தினார்கள். "நுங்கள் மகள் இக்குதிரை முகம் நீங்கி நன்முகம் பெற வேண்டுதிராயின் கடலினும் நதிகளிலும் மூழ்கச் செய்யுங்கள்" என்று அசரீரி கூறியது. அது கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர். பின்னர் அரசன் மகளை தோழியரும் காவலரும் சூழ தீர்த்த யாத்திரைக்கு அனுப்பினான்.

அங்கசுந்தரி, பாண்டிநாடு, சோழநாடு, தொண்டைநாடு, சேரநாடு முதலிய தேயங்களிலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் ஆடி ஆங்காங்கு மூர்த்திகளைத் தெரிசித்து, ஈழநாட்டிற்குச் சென்றாள். அங்கு இந்து சமுத்திரம் என்னும் மகேந்திரக் கடலில் மூழ்கி, ஏமகூடம் என்னும் சுப்பிரமண்ணிய பிரமரந்திரஸ்தலமாகிய கதிர்காமத்திற்குப்போய், மாணிக்க கங்கையில் மூழ்கி, கதிர்காமவேலவரை அன்புடன் வழிபட்டு கண்ணீர்மல்கி உள்ளங்கசிந்து, "கருணைக்கடலே! கலியுக வரதரே! பணிவார் பவப்பிணி யகற்றும் பரமகுருவே! என்வினை என்று தீருமோ? உன் கருணை என்று கிடைக்கப்பெறுவேனே? தேவதேவா! ஆபத்தில் அஞ்சேல் என்று ஆட்கொள்ளும் ஆறுமுகத்தரசே!" என்று துதித்துப் புலம்பினாள். "குழந்தாய்! வருந்தற்க: இவ்விலங்கையின் வடகோடியிலே கடற்றுறை தீர்த்தமொன்றுளது. அதில் மூழ்கி காங்கேயனாகிய நம்மை தியானிப்பாய்; இவ்வினையகலும்" என்று முருகப்பெருமான் அசரீரியாக மொழிந்தருளினார்.

அங்கசுந்தரி ஆனந்த வெள்ளத்துள் அழுந்தி அங்ஙனமே வந்து வடகோடியிலே கடற்கரைற்றுறை யடைந்து, யாழ்ப்பாணத்துள்ள நகுலகிரியின் அருகே கடற்கரையில் ஊறிப்பெருகும் புண்ணிய தீர்த்தத்தில் குமாரக் கடவுளைச் சிந்தித்து முழுகி எழுந்தாள். உடனே குதிரை முகம் நீங்கியது. அதுகண்ட அனைவரும் மகிழ்ந்து உக்கிரப்பெருவழுதிக்கு அறிவித்தனர். அவர் ஆங்கு

வந்து அவ்விடத்தில் ஒரு பெரிய திருக்கோயில் புதுக்குவித்து, அங்கொரு ஊரையும் உண்டாக்கி, சிற்பலட்சணப்படி முருகவேள் திருவுருவொன்றைச் செய்வித்து கடற்றுறை வழியாக வருவித்து நன்னாளில் பிரதிட்டை புரிந்தனர். நித்தியநைமித்திகங்களைச் செவ்வையாகச்செய்ய வேண்டிய மானியங்களை விட்டனர். ஆதிசைவர்களையும் சைவப்பெருமக்களையும் பாண்டிநாட்டிலிருந்து தருவித்து இருத்தினர். குதிரை முகம் விட்டபடியால் அவ்வூருக்கு மாவிட்டபுரம் என்றும், கடல்வழியாக முருகன் திருவுருவம் வந்தபடியால் அத்துறைக்குக் காங்கேயன் துறையென்றும் பேரிட்டனர். பிறகு முருகப்பெருமானை பன்முறை வழிபட்டு மகளுடன் மதுரைசேர்ந்தார். இன்னும் மாவிட்டபுரத்துள்ள அத்தீர்த்தத்தில் முழுகி, பலர் பலப்பல நோய்கள் நீங்கப்பெற்று புனிதராவது கண்கூடு.

*கங்கையின் மூழ்கினும் பேய்ச்சுரைக் காகங் கதிப்பிலிதிற்*
*சங்கையி லென்ற தரவுரை சாயத் தலத்தருய்ய*
*மங்கையுந் தோயக் குரமுக மோட்டிய வார்கிரிவேல்*
*அங்கையன் தீர்த்த நகுலத்தி ருரு மறிமின்களே.*

—தீர்த்தமாலை

## முருகபிரான் கண்ணனை முக்கண்ணனாக்கிய லீலை.

(தணிகைமணி ராவ்சாஹிப் உயர்திரு,
வ. சு. செங்கல்வராய பிள்ளை, அவர்கள், சென்னை )

'நகரேஷு காஞ்சி' எனப் ப்ரசித்திபெற்ற காஞ்சியம்பதியிற் பல கோயில்கள் உண்டு. திருமால், பிரமன் ஆதிய தேவர்கள் பூசித்த பல ஆலயங்களுள்ளும் சிறந்ததாய்த் திகழுவதாகும் தேவியார் ஏலவார் குழலி பூஜைசெய்த ஸ்ரீ ஏகாம்பரநாதரது திருக்கோயில். தாரகாசுரனைச்சங்கரித்த பிறகு சூரனை வெல்வதற்கு இமகிரிஎல்லையினின்றும் தெற்கே தனது சேனையுடன் வந்த தேவசேனாபதியாம் குமரேசர் தமது வழியில் காஞ்சிமா நகரில் உள்ள பல ஆலயங்களையும் கண்டார் எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

"ஏல வார்குழல் உமையவள் பூஜைகொண் டிருந்த
மூல காரண னாகிய முதல்வன் ஆ லயமும்
மாலும் வேதனும் அமரரும் வழிபடு மற்றை
ஆல யங்களா யுள்ளவுங் கண்டனன் ஐயன்"
[வழிநடைப்படலம் (கூ)]

காஞ்சியில் உள்ள பல ஆலயங்களுள் ஒன்று கச்சித் திருமேற்றளி ஆலயம். பூலோகத்துக்கு வந்து சிவபெருமானைப் பூசித்தால்தான் சிவபிரானது திருவருள் கிடைக்கும், வீடுபேறு அடையலாம் என்னும் உண்மையை உணர்ந்தவர் திருமால்.

"புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே ; இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கி" திருமாலாம்
அவன் விருப்பெய்த"
[திருவாசகம்-திருப்பள்ளியெழுச்சி (கூ)]

இம்மெய்ம்மையை உணர்ந்த திருமால் சிவசாரூபம் அடைய விரும்பிக் கச்சித் திருமேற்றளியில் சிவபெருமானைக் குறித்துத் தவஞ் செய்தார். சிவபெருமான் எதிர்தோன்றி, "அன்ப! உனது கருத்தை உணர்ந்தேன் கலியுகத்தில் 'ஏழிசைத் தமிழ் ஞான சம்பந்தன்' என்னும் கவுணியர்க்குலக்காளை ஒருவன் வருவான். அவன் உனக்குச் சிவசாரூபம் அருளுவான். அவன் வருமளவும் நீ இங்கேயே தவஞ்செய்துகொண்டிரு" எனக் கூறி மறைந்தனர். அவ்வண்ணமே திருமாலும் தவத்திருந்தார். முத்தமிழ் விரகராம் ஞானசம்பந்தர் கச்சிக்கு வந்து திருமேற்றளியைத் தரிசித்துப் பாடி அங்கு தனது பாட்டலங்கலால் திருமாலை (கண்ணனைச்) சிவஸ்வரூபம் அடைய (முக்கண்ணன் ஆக)ச் செய்தார். திருஞானசம்பந்தரது திருப்பதிகத்தின் சக்தியால் விஷ்ணு ரூபமாயிருந்து சிவலிங்கமாய் உருகின மூர்த்திக்கு "ஓத உருகீசுரர்" என்று பெயர்.

"கோட்டமின்றி மால் அம்முறை வதிந்து பூங் கொன்றைத்
தோட்டலங்கலால் தொழப் புகு முத்தமிழ் விரகர்

பாட்டலங்கலால் பரஞ்சுடர் திருவுருப் பெற்றான்"
—காஞ்சிப் புராணம்-திருமேற்றளிப்படலம் (கக)

இங்ஙனம் திருமாலாகிய கண்ணனை முக்கண்ணன் ஆகப் பெருக்கினர் திருஞானசம்பந்தர். இவ்வற்புதத் திருவிளையாடலை அருணகிரிநாதர் காஞ்சித் திருப்புகழில் (458)

"புகலு கொண்டற்குச் சித்தியளிக்கும பெருமாளே"

எனப்பாராட்டியுள்ளார்.

இங்ஙனம் ஞானசம்பந்தர் செய்த லீலையை முருகபிரான் செய்ததாகக் கூறுவது முறையோ எனின் முறையேயாம் என்க. ஞானசம்பந்தரை முருகபிரான் என்றே பெரியோர்களெல்லாம் பாராட்டியுள்ளார்கள். கவிச்சக்கிரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் தாம் பாடிய தக்கயாகப் பரணியில் சம்பந்தர் சமணரைக் கழுவேற்றிய லீலையை முருகபிரான் செய்த லீலையாகவே ஓதியுள்ளார். உமாதேவி கலைமகளை நோக்கி,

"என்-மருமகன் வள்ளி வ்துவை
மனமகிழ் பிள்ளை குமரன்
மதுரையில் வெல்லும் இரிய-தொரு கதை சொல்லு"

எனக் கட்டளையிட்டதாக அப் பரணியில் வருகிறது. அருணகிரிநாதரும்,

கருதும் ஆறிரு தோள் மயில் வேலிவை
கருதொணு வகை யோரரசாய் வரு
கவுணி யோர் குல வேதியனு யுமை கனபாரக்—
களப பூண்முலை யூறிய பாலுணு
மதலையாய் மிகு பாடலின் மீறிய
கவிஞனாய் விளை யாடிடம் வாதிகள் கழுவேறக்;
குருதி யாறெழ வீதியெலாமலர்
நிறைவ தாய்விட நீறிட வேசெய்து
கொடிய மாறன்மெய் கூனிமிரா முனை குலையாவான்—
குடிபுகீரென மாமதுராபுரி
யியலை யாரண வூரென நேர்செய்து
குடசை மாநகர் வாழ்வுற மேவிய பெருமாளே

(திருப்புகழ் 841)

'சமணரைக் கழுவேற்றிய பெருமாளே' எனத் திருப்புகழிலும், "அமண்சேனையுபாதி கழுமலங்கற்கு உரைத்தோன் அலதில்லை தெய்வங்களே"-எனக் கந்தரந்தாதியிலும் (29)—இவ்விரண்டு நூல்களிற் பின்னும் பல இடங்களிலும்—சம்பந்தப்பெருமான் லீலைகளை முருகவேள் செய்த லீலைகளாகவே பாராட்டியுள்ளார். இவர்களைப் பின்பற்றியே இவர்கள் காலத்துக்குப் பின்வந்த பல புலவர்கள் சம்பந்தப்பெருமானை முருகர் என்றே கொண்டாடி யுள்ளார்கள். ஆதலாற் கண்ணனை முக்கண்ணனாக்கிய திருவிளையாடல் முருகப்பிரானது திருவிளையாடலே, காஞ்சிப் புராணம் இரண்டாங் காண்டத்தில *அந்தரவேதிப் படலத்தில்-முருகவேள் தனது அருள்விழிப் பார்வையால் கண்ணனைத் திருமேற்றளியில் முக்கண்ணனாக்கினர் என்று சொல்லப்பட்டுளது.

* "இருவினை சவட்டி யாளும் எம்பிரான் பயந்த செம்மல்
பொருதிறற் சூர னுண்மை பொன்றிய முருகப் புத்தேள்
அருள்விழிப் பார்வை தன்னால் அணிகொள்மேற் றளியிற்
செந்தேன்
முருகவிழ் துளபத் தண்டார் முகுந்தனே ரிலிங்க மானான்."
(௩௫)

ஒன்றைமுன் றாகப் பெருக்கவும் வல்லை ஓதிநீ கண்ணனை
நோக்க
அன்றுமுக் கண்ணன் ஆயினன் அவனும், அங்ஙனே
கணக்கனும் என்னை
என்றுமுக் கணக்கனீ ஆக்குவை அறியேன், எளியனேற்
கப்படி ஒருநாள்
துன்றுமோ நன்றிச் சுகம்பெற வேனோ? சொல்லுதி
தணிகை நாயகனே—

[தணிகை நாயகன் மாலை-70]

# கற்பு.

வனவல்லி :— அம்மா! வாருங்கள்; இருங்கள். என்ன சாப்பாடு ஆயிற்று? நீண்டநாட்களாக இந்தப்பக்கத்திலேயே திரும்பவில்லையே? எல்லாம் சுகந்தானே?

கஜவல்லி :— அக்காள்! நமஸ்காரம். சுகம். உங்களைக்கண்டு வெகுநாளாயிற்றென்றுதான் வந்தேன். தங்கள் முகத்தைக் கண்டாலே பசியாறிவிடுகின்றது. தங்கள் ஒவ்வொரு சொல்லிலும் ஜீவகளை விளங்குகின்றது. தங்களைப்பற்றி புகழாதார் இல்லை. நீர் ஒரு அவதார விக்ரகம். பெண்ணுலகிறகே உங்களால் பெருங் கீர்த்தி.

வனவல்லி :— அம்மா! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை; குழந்தையை ஏன் அழைத்துவரவில்லை.

கஜவல்லி :— அக்காள்! சிலர் தானே தன் பெருமையை மூச்சைப்பிடித்துக்கொண்டு முப்பது நாளைக்குப் பேசுவார். உள்ளதை உள்ளவாறு நான் சொன்னாலுங்கூட பேச்சை மாற்றுவதற்காக குழந்தையை ஏன் அழைத்துவரவில்லை யென்று கேட்கின்றீர்? இதுவே தங்கள் பெருமைக்குச் சிறந்த சாட்சி. ஆகா! உத்தமகுண பொக்கிஷமாகிய உங்களை பார்த்தாலே பாக்கியமுண்டாகும். அக்காள்! பெண்களுக்கு உயர்வு எதனாலுண்டாகும்?

வனவல்லி :— அம்மா! பெண்மக்களுக்கு உயர்வு ஆடையினாலும், ஆபரணங்களாலும், அழகினாலும், அந்தஸ்தினாலும் உண்டாகாது: கற்பு ஒன்றாலேயே உண்டாகும்.

கஜவல்லி :— அக்கா! கற்பு என்றால் அதற்கு சுருக்கமான பொருள் யாது?

வனவல்லி :— அம்மா! கற்பிக்கப்படுவது கற்பு. தாய் தந்தை மாமன் மாமி கணவன் முதலியோரால் இப்படி இப்படி யொழுகவேண்டுமென்று கற்பிக்கப்படுவதே கற்பு. மேலும் கணவனுடைய சொல்லைத் தட்டாமலிருப்பதுவே கற்புக்கு உயிர் நாடி.

"கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை"

என்ற ஔவையாரின் அருளுரையை அறியாதார் அறியாதாரே.

**ஜலவல்லி:—** அக்கா! தங்கள் பொன்மொழி ஒவ்வொன்றிலும் புதிய ஒளி வீசுகின்றது. செவி குளிர்கின்றது. சிந்தை மகிழ்கின்றது. தங்கள் முக மண்டலத்தில் ஒழுகும் இனிமை என் கண்ணைக் கவர்கின்றது. எனக்கே தங்களை எடுத்து விழுங்கிவிடலாமா என்று தோன்றுகின்றது. உங்கள் கணவருக்கு எப்படித்தானிருக்குமோ? அக்கா! உங்களைப் பற்றி எல்லாரும் வாயார வாழ்த்துகின்றார்கள். உங்கள் சரிததிரமே ஒரு விநோதமாக இருக்குமாம். சிறிது எனக்கு சொல்லுங்கள். கேட்க மிக்க மனம் விரும்புகின்றது.

**வளவல்லி:—** அம்மா! நீ அதிகமாக எதிர்பார்க்கக்கூடாது: எனது சரித்திரத்தில் இரண்டொரு பகுதியைக் கூறுவேன்.

அம்மா நான் பிறந்த ஊர் சிவபாளையம்; எமது பிதாவின் பேர் சிவகுருநாதம் பிள்ளை; என் தாயார் ஞானவல்லி; எங்கள் குடும்பம் பெருந்தன்மையானது. என் பிதாவுக்கு சூதுவாது தெரியாது. எதையும் நம்புவார்; யாரும் அவரை ஏமாற்றிப் பணம் வாங்கிக்கொண்டு போய்விடுவர். என் தாய் பரம சாந்தை; சுகுணபூஷணி; நீண்ட நாட்களாக என் பிதாவுக்குக் குழந்தை கிடையாது. காசி ராமேஸ்வரம் போய் மூர்த்தி தெரிசனஞ் செய்து, தானதருமங்கள் அளவில்லாது புரிந்தனர். சிலகாலத்திற்குப் பின்பு என் தாய் சிப்பி கருக்கொண்டதுபோல் கருவுற்று என்னைப் பெற்றனள். நான் பிறந்தபின் என் பிதாவுக்கு அதிக செல்வம் உண்டாயிற்று என்று கூறுவர். என் பிதா என்னை மிகச் செல்வமாக வளர்த்துவந்தனர். எனக்கு நாமகரணம் சூட்டும் நாள் 12000 ரூபாய் செலவழித்து பெருவிழாபோல் கொண்டாடினாராம். அன்னமலை குவித்து ஆயிரக்கணக்கான ஏழைகளுடைய பசிநோயைப் பறக்கடித்தனராம்.

எனக்கு ஓராண்டு நிரம்பியது. விலை மதிக்கமுடியாத ஆபரணங்கள் என்மேல் பூட்டப்பெற்றிருந்தனவாம். எனக்கு ஆண்டு நிறைவிழா சிறப்பாக என் பிதா கொண்டாடினார். ஆயுஷ்ய ஓமம் வெகு முறையாக நடந்தது. ஏராளமான நண்பர்களும் சுற்றத்தினரும் குழுமியிருந்தனர்களாம். மிக உயர்ந்த விருந்து, மாலை சிறந்த இசை விருந்து. இரவு பரத நாட்டியம். இப்படி ஆடல் பாடல் முதலியன நிகழ எல்லோரும் இந்திரவுலகத்திலிருப்பதாக இன்புற்று மகிழ்ந்தனர். இரவு 2-மணிக்கு மேல் எல்லாம் அயர்ந்து உறங்கிவிட்டனர். இரவு மணி 4 இருக்

கும்போது எங்கள் வீட்டில் ஒருபெரிய குழப்பமுண்டாயிற்று. என்மீதுள்ள அளவற்ற நகையை விரும்பிய ஒரு கள்ளன் பெண் போல் சீலை யுடுத்து பெண்களிடையே நடமாடி இரவு என் தாயிடம் படுத்துக்கொண்டனன்; வெளியூரிலிருந்து வந்தவர்களில் ஒருவர் போலும் என்று என் தாய் நினைத்திருந்தனள். எல்லோரும் அயர்ந்து நித்திரையிலிருக்கும் சமயம் அப்பாவி என்னைத் தூக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தான். தோட்டத்துக் கதவைத் திறந்துகொண்டு அவன் போகும்போது அவசரத்திலும் இருட்டினாலும் வழியில் படுத்திருந்த இரண்டொருவரை மிதித்துவிட்டான். மிதிபட்டவர்கள் ஓவென்றலறி "திருடன், திருடன்" என்று கதறினார்கள்; என் பிதா முதலியோர் விழித்துக் கொண்டனர். அதற்குள் குழந்தையைக் காணாது என் தாய் அலறினாள். தடி உலக்கை முதலியவற்றை எடுத்துக்கொண்டு தோட்டத்துப்பக்கமாக ஓடுங் கள்ளனைத் தொடர்ந்தார்கள். வரைத்தாண்டி அவனைச் சற்று நெருங்கியவுடன், அவன் "இனி நாம் பிடிபட்டுவிடுவோம்; பிடிபட்டால் உயிர் நிலை பெறாது" என்று எண்ணி ஆங்கு எதிர்ப்பட்ட ஒரு காளி கோயிலுக்குள் நுழைந்து, என்னை காளிதேவிமுன் பாதத்தில் வைத்துவிட்டு காளிதேவிக்குப் பின்புறம் ஒளித்துக்கொண்டான்.

என் பிதா முதலியோர் காளி கோயிலில் நுழைந்து கள்ளனைத் தேடத் தொடங்கினார்கள். அப்போது அக் கள்ளன் இடியிடித் தாப்போல் கனைத்து, குரலை ஒருமாதிரியாக மாற்றி யமைத்துக் கொண்டு, "அடே பக்தர்! என்னுடைய அருளால் பிறந்த குழந்தையை ஆசிர்வதிக்கும்பொருட்டு நான் எடுத்துக்கொண்டு வந்தேன்; அது தெரியாமல் ஆடுகளைப்போல் ஓடிவந்தீர்கள்; விடிகின்றவரை இந்தக் குழந்தை நமது பாதத்தில் இருக்கட்டும்; விடிந்த பிறகு வந்து எடுத்துக்கொண்டு போங்கள். இல்லையேல் இப்போதே உங்கள் எல்லோருடைய குடல்களையும் பிடுங்கி மாலையாகப் போட்டுக் கொள்வேன்; சீக்கிரம் என் கோயிலை விட்டு விலகிப்போங்கள்; டே! என் அருள் இந்தக் குழந்தைக்கு உண்டாகட்டும்; ம்ம்ம்......போங்கள்" என்று கூறினான். அதைக்கேட்ட என் தந்தை முதலியோர் நடுநடுங்கி உள்ளபடியே காளிதேவி பேசுவதாக எண்ணி, உடனே கீழே விழுந்து கும்பிட்டு "தாயே! மன்னிக்கவேண்டும்; உன் குழந்தையையும் எங்களையும் காப்பாற்றுவது உன் கடமை: நாங்கள் விடிந்து வந்து குழந்தையை எடுத்துக் கொள்கின்றோம்" என்று கூறி யாவரும் வீடு சேர்ந்தனர்.

"ஆகா! காளிதேவியின் கருணையே கருணை" நமது குழந்தைக்கு ஆயுஷ்ய ஓமம் செய்த அன்றே அம்பிகை குழந்தைக்கு

அருள்புரிய வலிதில் வந்து ஆட்கொண்டனள். இந்த அதிர்ஷ்டம் ஆருக்குக் கிடைக்கும்?" என்று தந்தை முதலியோர் பலவாறு பாராட்டிப் பேசிக்கொண்டு வீடுசேர்ந்து எப்போது விடியு மென்று எதிர்நோக்கியிருந்தனர். அதற்குள் அக்கள்ளன் நகைகளையெல்லாம் கழற்றிக்கொண்டு காளி மீதுள்ள மஞ்சள் குங்குமத்தை எடுத்து குழந்தை நெற்றியில் நிரம்பப் பூசிவிட்டு ஓடிவிட்டான். விடிந்தபின் எனது தகப்பனாரும் தாயாரும் மற்ற சுற்றத்தாரும் குளித்துவிட்டு, தேங்காய், பழம் சூடம் முதலிய வற்றை எடுத்துக்கொண்டு காளி கோயில் சென்று பார்த்தனர். அம்பாள் திருவடியில் அழுதுகொண்டிருந்த என்னை யெடுத்து அணைத்து மகிழ்ந்தனர்—நகைகளைக் காணவில்லை. அதனாலும் என் பிதா தெளியவில்லை. "காளிதேவி! இந்தக் குழந்தை உன் குழந்தை: இதன்மீதுள்ள நகையெல்லாம் உனக்குக் காணிக்கையாக எடுத்துக்கொண்டீர் போலும்: மெத்த சந்தோஷம். உன் கருணையிருந்தால் போதும். நாங்கள் வருகின்றோம்" என்று வேண்டி தேங்காய் உடைத்து ஆராதனை செய்துவிட்டு வீடுசேர்ந்தனர். ஊர் முழுவதும் இந்த விஷயம் பரவியது. ஒருசில அறிஞர் இதை நம்பவில்லை. ஆனால் என் பிதாவுக்கு பரிபூரண நம்பிக்கை.

இரண்டு மாதங்களுக்குப் பின் எங்கள் அடுத்த ஊரில் ஒரு ஆச்சாரியாரிடம் ஒருவன் ஒரு தங்கச்சங்கிலியை விற்க வந்தான் அந்த ஆச்சாரி அதைக்கண்டதும் திடுக்கிட்டு, தனக்குள் இது சிவபாலையம் சிவகுருநாதம்பிள்ளையின் குழந்தைக்குத் தான் செய்துகொடுத்த நகையென்று சிந்தித்து, "அப்பா! இதோடு சேர்ந்த மற்ற நகைகளையும் கொணர்ந்தால் மொத்தமாக விற்று பணந்தந்துவிடுவேன் என்றார். வந்தவன் "இல்லிங்கோ. இது மட்டுந்தானுங்கோ; என்னவிலை போகும் பாருங்கோ" என்றான். ஆச்சாரியார், உடனே "இங்கு ஒருவருக்கு இது தேவையாக இருக்கின்றது; சற்று இரு" என்று அவனை இருக்கவைத்து ஒருசிறு கடிதத்தில் சில விபரம் எழுதி தன் ஆளிடம் அந்த நகையையும் கொடுத்து காதில் ஏதோ கூறியனுப்பினார். சிறிது நேரத்திற்குள் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வந்தார். வந்தவர் நகைகொணர்ந்தவனைப் பிடித்து அடிமேல் அடியடிக்க தான் பெண்ணுருவந் தாங்கி குழந்தையைத் திருடி காளி கோயிலில் நுழைந்து செய்த தந்திரத்தைச் சொல்லி குற்றத்தை ஒப்புக் கொண்டான். பூரா நகைகளையும் தந்துவிட்டான். பிறகு சிவபாலையம் என் பிதாவைத் தருவித்து விஷயங்கள் யாவையுங் கூறி அவரிடம் நகைகள் சேர்க்கப்பட்டது. என் பிதா அதி

ஆச்சரியமுற்று, " இப்படியுமுண்டா? காளிதேவியின் கடாட்ச மென்று எண்ணி ஏமாந்து போனேன்; அட்பாவி! உலகம் எவ்வளவு மோசமாக இருக்கின்றது. என்ன சூழ்ச்சி? அவன் செய்த தந்திரம் பெரிதா? அதை நம்பிய மதியீனந்தான் பெரிதா?" என்று பலவாறு தன்னைத்தானே நொந்துகொண்டு வீடு போயினர். பிறகு சிலநாள்வரை எங்கள் ஊர் முழுவதும் இதேபேச்சாக இருந்ததாம். அம்மா! இது என் இளமையில் நடந்த ஒரு அதிசயச் சம்பவம். இனி எனக்கு அறிவு தோன்றிய பின் நடந்தவற்றுள் ஒன்று கூறுவேன்; கேள்.

எனக்கு வயது 14 இருக்கும். அப்போது என்னைப் பலரும் விரும்பி என் பிதாவிடம் வந்து பெண் கேட்டனர். என் பிதா அறிவும் அன்பும் உடையவனுக்கே தரவேண்டுமென்று எண்ணி பெண் கேட்டவர்க்கெல்லாம் தனது உடன்பாடின்மையைத் தெரிவித்துவிட்டார். அப்போது செம்பள்ளி என்னும் ஊரில் எங்களுக்கு தூரபந்துவில் வீரப்பிள்ளை என்பவன் ' என்னை மணந்துகொள்ளவேண்டுமென்று விரும்பி தக்கவர்களைக் கொண்டு பெண் கேட்டான். என் பிதா அவனுடைய குணக் கேட்டை யறிந்திருந்தாராதலின் அவனுக்குப் பெண் தர இணங்க வில்லை; வீரப்பிள்ளையென்னும் அவ் வஞ்சகன் எப்படியும் என்னை அடையவேணடுமென்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான்.

எங்கள் ஊருக்கு 5 மைல் தொலைவில் உள்ள ஊர்க்காடு என்ற இடத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள துர்க்கா தேவிக்கு எனது பிதா ஆண்டுக்கொருவிசை மகாஅபிஷேகம் செய்து சிறந்த வழிபாடு செய்வது வழக்கம். அவ் வழிபாட்டின் பொருட்டு நாங்கள் அனைவரும் ஊர்க்காடு போய் அங்கு எங்கள் சத்திரத்தில் தங்கினோம். காலைமுதல் மாலைவரை துர்க்காம் பிகைக்கு அபிஷேகம் ஆராதனை முதலியன மிகவும் சிறப்பாக நடைபெற்றன. அன்னதானம் ஏராளமாக செய்யப்பட்டது. இவற்றையெல்லாம் அறிந்த வீரப்பிள்ளை தன் வஞ்சகத்தை முற்றுவிக்க அது நல்ல தருணமென்று எண்ணினான். தன்னுடைய ஆட்களில் நால்வரையழைத்து, "அடே! சிவபாளையம சிவகுருநாதம்பிள்ளை ஊர்க்காட்டில் துர்க்கா பூஜை போடு கின்றார். நீங்கள் இரவு 10-மணிக்கு நமது பல்லக்குடன் அங்கு போங்கள். அவர் தனது பரிவாரங்களுடன் விடியற்காலை புறப்படுவார். அதில் அவர் மகளை மெல்ல நீங்கள் அவர் களுடைய ஆட்கள்போல் நடித்து நமது பல்லக்கிலேற்றி கொணர்ந்துவிடுங்கள் ' அப்படி கொணர்ந்துவிட்டால் ஆளுக்கு

100 ரூபாய் தருவேன்" என்றான். அவர்களும், "அப்படியே செய்வோம்" என்று ஒப்புக்கொண்டு மாலையே வந்து என்னை அடையாளம் தெரிந்துகொண்டனர். பின்னர் விடிய 4-நாழிகை இருக்கும்போது எனது பிதா முதலியோர் அவரவர்க்குரிய வண்டி குதிரை பல்லக்கு முதலிய ஊர்திகளில் புறப்பட்டனர். நித்திரை மயக்கத்திலிருந்த நான் எனது பல்லக்கிலேற வந்தபோது வீரப்பிள்ளையின் ஆட்கள் என்னை வணங்கி அம்மா இதோ பல்லக்கு ஏறுங்கள் என்றார்கள். இருட்டினாலும் கண் கலக்கத்தாலும் நான் அதில் ஏறிக்கொண்டேன். எல்லா ஊர்திகளும் புறப்பட்டபோது, என் பல்லக்கு மட்டும் சற்று நிதானமாகப் பின்தங்கிவிட்டது. நான் பல்லக்கில் ஏறியதும் திண்டின்மீது சாய்ந்தவண்ணமாகத் தூங்கிவிட்டேன்; பிறகு அவர்கள் மெல்ல மெல்ல பின்னால் தங்கி வேறு வழியாக என்னைத் தூக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தனர். நிலந்தெளிகின்ற சமயம் எனக்குத் தூக்கம் தெளிந்தது. மெல்லப் பல்லக்கின் ஜன்னலின் திரையை நீக்கிப் பார்த்தேன். வேறு புதுவழியில் பல்லக்கு செல்வதாகத் தெரிந்தது. உடனே எனக்கு மிக்க பயமும் பதற்றமும் உண்டாயின. எனினும் என் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு "முருகா! முருகா! இந்த ஆபத்தினின்றும் என்னைக் காப்பாற்று; வேலும்மயிலுந்துணை" என்று துதித்து "ஓய்! ஏலா. ஒண்ணுக்கு வருகின்றது" என்றேன். அவர்கள் பல்லக்கை இறக்கினார்கள். நான் சற்று செடிமறைவில் நின்று சிந்தித்து மீண்டும் பல்லக்கினிடம் வந்து சுற்றுமுற்றும் பார்த்தேன். சிறிது தூரத்தில் ஒரு கள்ளுக்கடை தெரிந்தது; உடனே "ஏய்! நீங்கள் ரொம்ப அலுத்துப்போயிருக்கின்றீர்கள். எங்கப்பா உங்களுக்கு நேற்று பணந்தந்திருக்கமாட்டார். இந்தா 5 ரூபாய்; அங்கு ஏதாவது சாப்பிட்டு வாருங்கள்" என்று நான் 5-ரூபாயைத் தந்து பல்லக்கில் ஏறிக்கொண்டேன். அவர்கள் பரம சந்தோஷமாக ரூபாயை வாங்கி கள்ளுக்கடைக்குப் போய் தலைகால் தெரியாமல் குடித்துவிட்டுத் தள்ளாடி அறிவுமயங்கி ஆட்டம் போட்டுக்கொண்டு நெடுநேரம் பொறுத்து வந்தனர். அதற்குள் நான் பல்லக்கில் தலையணையை நிற்கவைத்து அதன்மீது சால்வையைப் போர்த்து ஒரு ஆள் உட்கார்ந்திருப்பதுபோல் செய்து ஜன்னல் திரையை மூடிவிட்டு, நான் ஒரு வெள்ளைத்துணியால் முக்காடிட்டு சாலையை விட்டுக் கொடி வழியில் ஒரு புதரண்டை மறைந்துகொண்டேன் அவர்கள்

நன்றாகக் குடித்துவிட்டு மதிமயங்கி வந்து பல்லக்கில் நான் இருப்பதாக எண்ணி பல்லக்கை எடுத்துக்கொண்டு நடந்தனர். பிறகு நான் மகிழ்ச்சியும் சிறிது பயமும் அடைந்து எங்கள் ஊருக்குப் போகும் சாலையில் மெல்ல நடக்கத் தொடங்கினேன். அப்போது எங்கள் ஊருக்குப்போகும் ஒரு இரட்டைமாட்டு வண்டி ஒன்று போய்க்கொண்டிருந்தது. அவனுக்கு வாடகை ரூ. 1 தருவதாகக் கூறி அதில் ஏறி யமர்ந்துகொண்டேன்.

இதற்குள் சிவபாலையத்தில் என்னைக் காணாது பெரிய குழப்பமுண்டாகி நாலாபக்கத்திலும் ஆட்கள் தேடத் தொடங்கினர். ஒரே அழுகுரலாக இருக்கும் எங்கள் வீட்டிற்கு திடீரென்று நான் போய்ச்சேர்ந்தேன். என்னைக் கண்டதும் போன உயிர் திரும்பியதாக எல்லோரும் என்னைக் கட்டிப்பிடித்து அழுதார்கள். நடந்ததையெல்லாம் நான் விபரமாகக் கூறினேன்.

பிறகு பல்லக்கு செம்பள்ளி சென்றது. வீரப்பிள்ளை ஓடி வந்து "ஏலா! கொண்டுவந்துவிட்டீர்களா"? என்றான் "எஜமான்! நாங்கள் போனகாரியம் இதுவரை காயானதே கிடையாது. பல்லக்குக்குள் உருப்படி யிருக்கின்றது" என்றார்கள். உடனே வீரப்பிள்ளை பல்லக்கின் திரையை நீக்கிப்பார்த்தான். தலையணையும் போர்வையுந் தவிர வேறு ஆள் இல்லை; உடனே அவனுக்கு ஆலகாலம்போல் சிற்றம் பிறந்தது. அவர்களுக்கு ஆளுக்கு 100 ரூபாய் தருவதாகச் சொன்னதற்குப் பதில் 100 அடி தந்தான். எனது பிதா வீரப்பிள்ளையே இந்த வஞ்சனை செய்திருப்பான் என்று ஐயுற்றனர். பல்லக்குஆட்கள் அடியின் வேதனைப் பொறுக்கமாட்டாமல் போலீஸ் அதிகாரியிடம் ஓடி நடந்ததைக்கூறி முறையிட்டனர். பிறகு அதிகாரிகள் விசாரணை செய்து வீரபிள்ளையை அந்தமானுக்கு அனுப்பிவைத்தனர்.

பின்னர் நான் இந்த ஊரில் உத்தம குணங்களின் உறைவிடமாக விளங்கும் இவரை மணந்துகொண்டேன். இப்படி என் வாழ்நாளில் அநேக சம்பவங்கள் உண்டு. எல்லாம் ஆண்டவனுடைய செயல், அம்மா கடவுளை நம்பி கணவனையே பேணினால் எல்லாம் நன்மையாக முடியும். அவர் வருகின்றவேளை வந்துவிட்டது என்றாள்.

கனகவல்லி :— அக்கா! மெத்த சந்தோஷம். நான் போய்வருகின்றேன். கற்பரசியாகிய உனது சிநேகமே எனக்கு பெரும் [illegible] கிறேன் என்று விடைபெற்றுச் சென்றாள்.

இவ்வாண்டு புதிதாகச் சேர்ந்த ஆயுள் சந்தாதார்ர்கள்.

கொடையாளர் ரூ 25—0—0

திரு. ,ச. தெய்வசிகாமணியா பிள்ளை, விரகனூர்,
பசுமலை போஸ்டு, மதுரை ஜில்லா.

---

## ஒட்டக்கூத்தர் மடாலயம்

கலியாணபுரம், கஞ்சனூர் தபாற்சாலை, விழுப்புரம் மார்க்கம்.

இம்மடாலயம் சிவஞானயோகி முருகானந்த சுவாமிகளால் இந்தியா, இலங்கை, இரங்கூன் முதலான பலநாட்டு அன்பர்கள் பொருளுதவிகொண்டு கட்டப்பட்டது. நிகழும் தாரண ஆண்டு ஆவணித்திங்கள் 10-ஆம் நாள் வெள்ளிக்கிழமை சுவாதி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 8½க்குமேல் 10½க்குள்ளாக துலா லக்ஙினத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

---

## வெகு சரசம்! உத்திரவாதம்!!

எங்கள் சொந்த தரியில் தயார் செய்யும்

**பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை.**

**பட்டு-சேலை தினுசுகள்**

**சாயத்திற்கும் ஜரிகைக்கும்**

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.

வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்


**எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,**


**எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.**

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

---

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஒளஷதங்கள்.



ஜெண்ட்ஸ்: யுனைடெட் கம்பெனீஸ், 54 பந்தர்தெரு, மதராஸ்.

தந்தி விலாசம் "சேமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது சமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது சமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் சமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

"சமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.
1-க்கு 1—0—0.     1-க்கு 0—14—0.

கிடைக்குமிடம்:---

மேகதிரங்கய்யு செட்டியார் சன்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்.

ஏஜெண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI, Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi, N. A.